நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 208 /2023

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெருமாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | சித்தன் |
| கிராமம் | : | ஓலையூர் |
| வட்டம் | : | அந்தியூர் |
| மாவட்டம் | : | ஈரோடு |
| சாட்சி வரிசை எண் | : | PW 4 |
| வயது | : | 42 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 22–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.45PM.

1. நான் தற்போது ஓலையூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராமசாமி எனது மாமனார் ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு எனது மாமனார் ராமசாமியை ஆஜர் எதிரிகள் கல் மற்றும் கால் மற்றும் விறகு கட்டையால் அடித்துள்ளார்கள். மூங்கில் வெட்டுவது சம்பந்தமாக

அவர்களுக்குள் பிரச்சினை இருந்து வந்துள்ளது.

2. தகவல் தெரிந்து நானும், என்னுடைய சின்ன மாமனாரும், பாலமலைக்கு அடுத்த நாள் சென்று காயம்பட்ட எனது மாமனார் ராமசாமியை மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். அ.சா.1.ராமசாமிக்கு முகம் மற்றும் கால்களில் பலத்த அடிப்பட்டு இருந்தது. நாங்கள் தான் அ.சா.1 ராமசாமியை தோளில் தூக்கிபோட்டு ஜீப்பில் போட்டு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போன்மூலம் தகவல் சொல்லிதான் எனக்கு தெரியும். போலீசார் சம்பவம் குறித்து என்னை விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்து மலைக்கு கீழ் ஒரு கிலோ மீட்டர் ஜீப் வரும் இடத்திற்கு தூக்கி வந்து ஜீப்மூலம் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம்.

2. பொதுவாக அந்த ஜீப் மலை அடிவாரமான கண்ணாமூச்சியில் இருந்து மலைக்கு பொது மக்களை போக வர அழைத்து செல்ல பயன்படுத்துவது என்றால் சரிதான். நான் எனது மாமியார், மற்றும் சின்னமாமனார் சேந்தான் என்பவர்கள் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு எனது மாமனாரை கொண்டு வந்து சேர்த்தோம். எனது மாமனாருக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் காரணமாக எனது மாமனார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–02.57PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**